அ.வ எண் 87/2017 மாரியம்மாள் (வாசா1) தேதி:05.12.2022

முதல் விசாரணை தொடர்ச்சி

வாதியின் தரப்பில் கூடுதலாக ஒரு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி ஆவணம் வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1,4,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1ம் வாதிக்கு 5ம் வாதி மட்டுமே வாரிசு என்று சொன்னால் சரிதான். 1ம் வாதியான ராமலட்சுமி இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான். 1 வது தபசில் 1,4,6 பிரதிவாதிகளுக்கு 8/28 பங்கு உண்டு என்று சொன்னால் சரிதான். 2வது தபசில் சொத்தில் மேற்படி பிரதிவாதிகளுக்கு தலா 1/7 பங்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான்.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை.

2ம் பிரதிவாதி சங்கரப்பன் என்பவருக்கு 1வது தபசில் சொத்தில் 8/28 பங்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான். அதே போல் 2 வது தபசில் சொத்தில் மேற்படி 2ம் பிரதிவாதிக்கு 1/7 பங்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான்.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்

சார்பு நீதிபதி,

கோவில்பட்டி.